செய்தி வெளியீடு எண்:054 நாள் : 23.01.2016

## செய்தி வெளியீடு

## 25–1–2016– தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்கள்

ஜனநாயக தேர்தல் முறைகளில் குடிமக்கள் தங்கள் பங்களிப்பை அதிகப்படுத்தும் ஒரு முயற்சியாக இந்தியத் தேர்தல் ஆணையம் தனது நிறுவன நாளான ஜனவரி 25–ம் தேதியை தேசிய வாக்காளர் தினமாக ஒவ்வொரு வருடமும் 2011–ஆம் ஆண்டிலிருந்து கொண்டாட வேண்டும் என்று அறிவித்துள்ளது. இந்த ஆண்டு ஜனவரி 25–ஆம் நாளை ஆறாவது தேசிய வாக்காளர் தினமாக மாநிலமெங்கும் நாம் கொண்டாடுகின்றோம். இந்த ஆண்டின் மையநோக்கு 'ஆர்வமான பங்களிப்புடன் தேர்தல் நடைமுறைகளில் பங்கேற்றல்' என்பதாகும்.

தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்களுக்கு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் 65616 வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள அனைத்து 29291 வாக்குச் சாவடி அமைவிடங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாநில அளவிலான விழா மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தலைமையில் 25.1.2016 அன்று காலை 11.00 மணியளவில் ஆளுநர் மாளிகையில் நடைபெறும். அவ்விழாவில், ஆளுநர் அவர்கள் தேசிய வாக்காளர் தின உறுதிமொழியினை ஏற்கவைத்து, சிறப்புரையாற்றுவார் மற்றும் புதிதாக பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையினையும் அவர் வழங்குவார். தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர், திரு. பி. சீத்தாராமன், இ.ஆ.ப (ஓய்வு)., அவர்களும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொள்வார்கள்.

வலுவான ஜனநாயகத்திற்கு பெருமளவில் பங்கேற்றலின் முக்கியத்துவத்தையும் அதில் இளைஞர்களின் பங்கையும், 'ஆர்வமான பங்களிப்புடன் தேர்தல் நடைமுறைகளில் பங்கேற்றல்' என்னும் மையக்கருத்தை உணர்த்தும் வகையில் இவ்விழாவில் பள்ளிச் சிறார்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

இதே போல் மாவட்ட அளவிலான விழாக்களிலும் வாக்குச் சாவடி நிலையிலான விழாக்களிலும் தேசிய வாக்காளர் தினத்திற்கான உறுதிமொழியினை வாக்காளர்களை ஏற்கச் செய்வதோடு புதிதாக பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டைகளும் மற்றும் வாக்காளர்களாக பதிவு செய்வதும், வாக்களிப்பதும் எப்படி என்பதனை தெரிவிக்கும் கையேடும் வழங்கப்படவுள்ளன. மேலும், ஜனவரி 25, 2016 அன்று 11.00 மணியளவில் அரசு அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் வாக்காளர் உறுதிமொழி ஏற்கப்படும்.

இதேபோல் 26.01.2016 அன்று நடைபெறவிருக்கும் கிராம சபைக்கூட்டங்களில் வாக்காளர் உறுதிமொழி ஏற்கப்படும். சென்னையில் நடைபெறவுள்ள குடியரசு தின விழாப்பேரணியில் 'ஆர்வமான பங்களிப்புடன் தேர்தல் நடைமுறைகளில் பங்கேற்றல்' என்னும் மையநோக்கின் அடிப்படை குறித்த ஒரு அலங்கார ஊர்தியும் இடம் பெறும். தேசிய வாக்காளர் தினத்திற்கு முன்னோடி நிகழ்ச்சிகளாக மாவட்டங்களில் ஏற்கனவே பேரணிகள், மினிமராத்தான் ஓட்டங்கள், விவாதங்கள், மனித சங்கிலி நிகழ்ச்சிகள், வீதி நாடகங்கள், பலூன்கள் மூலம் விளம்பரங்கள் முதலியவை நடத்தப்பட்டு வருகின்றன.

அனைத்து வாக்காளர்களும் தங்களின் கைபேசி எண்ணிலிருந்து 1950 என்ற எண்ணிற்கு தங்களின் வாக்காளர் அடையாள அட்டை எண்ணுடன் குறுஞ்செய்தி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். வாக்காளர் தங்களின் கைபேசி எண்ணை பதிவு செய்வதின் மூலம், வாக்காளர் சேவை விபரங்களான, வாக்குச்சாவடி விபரம், வாக்காளர் விபரம் குறித்த தகவல்கள் வாக்காளரின் கைபேசி எண்ணிற்கு அவ்வப்போது அனுப்பப்படும்.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**